செ.வெ.எண்: 73/செப்டம்பர் நாள்: 30.09.2019

## பத்திரிக்கை செய்தி

தருமபுரி மாவட்டத்தில் பருவமழை பெய்து வருவதால் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை மரு.கே.குழந்தைசாமி அவர்கள் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது.

தருமபுரியில் பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால் காய்ச்சல் உள்ளிட்ட நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. தருமபுரி மாவட்ட மக்கள் அண்டை மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு வேலைக்குச் சென்று வருவதாலும் காய்ச்சல் உள்ளிட்ட நோய்கள் ஏற்படுகிறது.

251 ஊராட்சிகள், 10 பேரூராட்சிகள் மற்றும் தருமபுரி நகராட்சி உள்ளிட்ட இடங்களில் குளோரின் கலந்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் மழைநீர் தேங்கிடாதவாறு அதனை வெளியேற்றவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. குப்பைகள் தேங்காதவாறு அவற்றை அகற்றவும், பிளிச்சிங் பவுடர் 24 மணி நேரத்திற்கு ஒரு முறை தெளிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் காய்ச்சல் உள்ளிட்ட நோய்களுக்கு கிராமப்புறங்களில் போலி மருத்துவரை அணுகி சிகிச்சை பெறாமல், அருகில் உள்ள அரசு மருத்துவமனையை உடனடியாக அணுகி சிகிச்சை பெறவேண்டும். மேலும் போலி மருத்துவர்கள் யாரேனும் சிகிச்சை அளிப்பது கண்டறியப்பட்டால் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

வட்டார அளவில் மருத்துவ அலுவலர்கள் தலைமையில் 30 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. 8 வட்டாரங்களில் 250 பேர் கொண்ட குழுவினர் தீவிர சிகிச்சை அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. 380 மஸ்தூர்கள் கொசு புழு ஒழிப்பு பணியில் ஈடுபடுவார்கள். மேலும் பொதுமக்கள் தண்ணீரை காய்ச்சி குடிக்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உள்ளிட்ட இடங்களில் காய்ச்சல் உள்ளிட்ட நோய்களுக்கு சிகிச்சை அளிக்க போதிய மருந்து மற்றும் மாத்திரைகள் இருப்பு உள்ளது. எனவே பொதுமக்கள் அரசு மருத்துவமனைகளை அணுகி சிகிச்சை பெறவேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் துணை இயக்குநர் மரு.ஜெகதீஸ்குமார், இணை இயக்குநர் மரு.மணிமேகலை, தலைமை பூச்சி நிபுணர் மரு.ராணி, வட்டார மருத்துவ அலுவலர்கள், மருத்துவர்கள் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**